அகம்

26.2.35. R. சிவோகம்.

அகம் - 1 நகம் -

2

14. Mettu Street,
Salem Town.
26-2-35.

மகா-ள-ள-ஸ்ரீ.

ராவ்பகதூர். K. V. கிருஷ்ணசாமி ஐயாவர்களுக்கு:-

அன்புடைப் பெரியீர்!

பலவணக்கம்; தமிழ்த் தெய்வமாகவானவும் மகாமகோபாத்தியாய, டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்களின் என், பதாம் ஆண்டு நிறைவுவிழாவை, மார்ச்சுமாதம் 6-ம்தேதி கொண்டாடப்போகிற செய்திகேட்டு, பேரின்பக்கடலில் ஆழ்ந்தேன்|| தமிழன்னைக்கு ஐயாவர்கள் செய்துள்ள வேலையை அளவிட் டுரைக்கமுடியாது. தமிழ்த் தெய்வமே இவ் வுருவெடுத்துவந்திருக்கிறது என்றுகூறுவதைத் தவிர வேறென்னகூறுவது? இத்தகையபெரி யார்மேல்நாட்டில் தோன்றியிருப்பாரேயா கில், அம்மேல்நாட்டார் இவரியற்றிய நூல் வொருநூலுக்கும், நூல்வொரு உருவச்சிலை நாட்டியிருப்பர். ஆனால் தமிழ்நாட்டிலானாகிய நாம் என்னசெய்யப்போகிறோம்.

மார்ச்சுமாதம் 6-ம்தேதி புதன்கிழமை மாலை 5-மணிக்கு, ஐயாவர்களுக்கு உபசா ரப்பத்திரம் நன்றி அளித்தும், அவர்களு டைய உருவப்படத்தைச் சென்னை சர்வ கலாசாலை மண்டபத்தில் நிலை பெறுவைத் தும், அவர்கள் செய்துவரும் நூற்பதிப்பு

அருள்

26.2.35. R. சிவோகம்.

அருள் - ஒரு நகல் -

(2)

வேலைகள் தொடர்ச்சியாக நடைபெற்றுவரு
கற்குரியனவ்வாறுகளைச் செய்தும், பொருந்
தலைசெய்வோர்களுக்குத்தக்கபடி வேறு
உசிதமானவற்றைச்செய்தும் அவர்களை
இச்சமயம்பாராட்டலெண்ணியிருப்பதாக
அறிக்கைகயால் கண்டுமகிழ்ந்தேன். அடியே
னுக்குத்தோன்றியுள்ளகருத்தையும் இது
சமயம் தெரிவிக்க எனதுமனம்விழைகின்
றது. ஐயாவர்கள் நீண்டகாலமாகத்தமிழ்
ப்பேராசிரியராகஇருந்துசென்னைஅர
சாங்கக்கல்லூரியான் (Presidency college)
முன்புறத்தில்கடவுநோக்கியவண்ணம்
அவாதுஉருவச்சிலையொன்றைநிறுவுதல்
வேண்டும். தமிழ்த்தெய்வத்துக்குச்செய்
யும்மைகைம்மாறுஇதைவிடவேறுஎன்றும்
பதாகஅடியேனுக்குத்தோன்றவில்லை.

ஆனந்தவிகடன் அன்பாகக்கூறிய
வண்ணம், ஐயாவர்கள் தமதுசுயசரிதை
யைஎழுதிமாறுதருங்களெனப் போன்றபெரி
யோர்கள் தூண்டவேண்டும். அதிலும்
அடுமைக்களமகளில் வெளிவருமாறு
செய்தால்மிகவும் மேன்மையாகஇருக்கும்

26.2.35. R. சிவயோகம்.

அருள் - ம் நகர் -

(3)

கடைசியாக அடியேனது கிரியவரூப்பத்
தையும் பூர்த்திசெய்வீர்களெனநூனைக்
கிறேன். மகாமகோபாத்தியாய, டாக்டர்.
உ.வே. சாமிநாதையரவர்களுடைய
கையெழுத்தை (Auto-graph) அடியேன்
பெறவேண்டுகிறேன். தமிழ்த்தெய்வத்
தின்கையெழுத்தானது, அடியேனதுமி
டாநாய்ச்சுசிக்கும், தமிழ்த்தொண்டுக்கும்
பெரிதும் தூண்டுதலாக இருக்குமென்னு
எண்ணுகிறேன். ஆகவேயான்கொடு
த்துள்ள இச்சிறுசிநமத்தைப் பாராட்டா
மல், தாங்கள் அன்புகூர்ந்து எனக்கு
ஐயாவர்களுடைய கையெழுத்தைவாங்கி
அனுப்புவீர்களெனமிகவும் ஆவலோடு
எதிர்பார்க்கிறேன். பதிலுக்கு வேண்டிய
தபால்தலைகளையும் இத்துடன்அனுப்ப
யிருக்கிறேன்.

மகாமகோபாத்தியாய, தாகூரினைத்ய
கலாநிதி, திராவிடவித்யாபூசணம்,
டாக்டர். உ.வே. சாமிநாதையரவர்
களுடைய எண்பதாம் ஆண்டுநினைவு

26.2.35. R. சிவோகம்.

அசல் - 1 நகல் -

(4)

வடிவானவை முன்னிட்டு ரூ 5. இன்றுதுங்கள் பேருக்கு மணியார்டர்செய்திருக்கிறேன். அன்புகூர்ந்து பெற்றுக்கொள்ளவேண்டுகிறேன்.

"வாரியுட்கலந்த புன்னீர் வாரிதிநீரேயாகும்
கீரியபயறுங் கலந்த நீர்க்குமும் பாலேயாகும்"

என்ற திருநாவுரம், மகாவாக்வான். மீனட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் கூறியருளியபடி, அடியேன் அஞ்சியுள்ளதிச்சிறுதொகையையும் மதிக்கவேண்டுகின்றேன். ஐயாவர்களுக்கு நீண்ட ஆயுளையும், நீடூழி சரீரத்தையும் அருளுமாறு எல்லாம்வல்ல சிவபெருமானை மனமொழிமெய்களால் வணங்குகின்றேன்.

இங்ஙனம்,
தமதுபதியுஞ் சேவயுடன்
எதிர்பார்க்கும்,
தாழ்மன்,
R. சிவோகம்

My address
R. Sivoham,
14. Mettu Street,
X. Salem Town

26.2.35. R. சிவோகம்.

அசுவி – 1 நகல் –